**சார்பு நீதிமன்றம், திருவாரூர்.**

முன்னிலை திரு.G.கிருஷ்ணன், B.A., L.L.B.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.120/2021**

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு.கே.சம்பத் | த/பெ:குப்புசாமி | |
| | | க/பெ : | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | அலைபேசி எண்: | |
| தேதி: | 06.08.2024 | முகவரி: | |

முதல் விசாரணை...

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்து என்னால் உண்மை என சொல்லப்பட்டவை தான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள முதல்நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு வாதி தாக்கல் செய்த முதல்நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் வா.சா.1ன் முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகின்றது.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 19.07.1960 | என்னுடைய தாயார் சீதாலெட்சுமி தாவா சொத்தை கிரயம் பெற்றதற்கான கிரய ஆவணம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | 20.07.2021 | பட்டா மாறுதல் உத்தரவு | கணிணி நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | 28.08.2007 | எனது தாயார் இறப்பு சான்றிதழ் | கணிணி நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | 05.07.2021 | 1, 2 பிரதிவாதிகளுக்கு நான் எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | 07.07.2021 | 1 ஆம் பிரதிவாதி மேற்படி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் | வா.சா.ஆ.5 |
| 6 | 14.07.2021 | 2 ஆம் பிரதிவாதி மேற்படி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதற்கான பதிவு அஞ்சலக உறையுடன் கூடிய சட்ட அறிவிப்பு | அசல் | வா.சா.ஆ.6 |
| 7 | 27.07.2021 | 2 ஆம் பிரதிவாதி பெயரை சரியாக குறிப்பிட்டு நான் எனது வழக்கறிஞர்மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் | வா.சா.ஆ.7 |
| 8 | 29.07.2021 | 2 ஆம் பிரதிவாதி மேற்படி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் | வா.சா.ஆ.8 |
| 9 | -- | தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டுதல் மதிப்பு | கணிணி நகல் | வா.சா.ஆ.9 |

தாவாபடி தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை - வேண்டுகோள் பெயரில் வரும் 13.08.2024 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்.G.கிருஷ்ணன்,

சார்புநீதிபதி,

திருவாரூர்